செ.வெ.எண்:43 நாள்:29.08.2020

**நாமக்கல் மாவட்டம்**

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களின் கட்டுமான பணிகளை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை அமைச்சர் மருத்துவர்.வெ.சரோஜா அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டார்கள்.**

----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களின் கட்டுமான பணிகளை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை அமைச்சர் மருத்துவர்.வெ.சரோஜா அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (29.08.2020) நேரில் பார்வையிட்டார்கள்.

நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களின் கட்டுமான பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.03.2020 அன்று அடிக்கல் நாட்டினார்கள். நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரிக்கு 5 கட்டடங்கள் 3,28,161 சதுர அடி பரப்பளவில் ரூ.112.32 கோடி மதிப்பீட்டிலும், மருத்துவமனைக்கு 9 கட்டடங்கள் 4,48,333 சதுர அடி பரப்பளவில் ரூ.157.21 கோடி மதிப்பீட்டிலும், இருப்பிட கட்டடங்கள் 8 எண்ணிக்கையில் 2,29,998 சதுர அடி பரப்பளவில் ரூ.69.22 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன.

மருத்துவ கல்லூரி கட்டடமானது தரை தளம் மற்றும் 5 மாடிகளுடனும், மருத்துவமனை கட்டடங்கள் வாகனம் நிறுத்தும் தளம், தரைதளம் மற்றும் 6 மாடிகளுடனும், விடுதி கட்டடங்கள் வாகனம் நிறுத்தும் தளம், தரைதளம் மற்றும் 5 மாடிகளுடனும் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த பணிகள் விரைந்து நடைபெற்று வருவதை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை அமைச்சர் மருத்துவர்.வெ.சரோஜா அவர்கள் ஆகியோர் இன்று (29.08.2020) நேரில் பார்வையிட்டார்கள்.

பின்னர், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துரையாடினார்.

இந்த கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் அவர்கள், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.சந்திரசேகரன் அவர்கள், காவல் கண்காணிப்பாளர் திரு.ச.சக்திகணேசன்.இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்

திருமதி.துர்காமூர்த்தி அவர்கள், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.த.கா.சித்ரா அவர்கள், துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம் அவர்கள் உள்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.